8 ஜனவரி 2023

Newbec

NEW WAY OF BEING CHURCH

ஆண்டவரின் திருக்காட்சி விழா

மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்: ஒன்றிப்பு, பங்கெடுப்பு, மறைத்தூது

மாதாந்திர கருப்பொருள்: **கல்வி**

# ஆண்டவரின் திருக்காட்சியில் நமது குடும்பம்

“எபிஃபனியா” என்று கிரேக்கத்திலும் ஆங்கிலத்தில் “எபிஃபனி” என்ற வார்த்தைக்கு, “கிறிஸ்துவின் வெளிப்பாடு” என்று பொருள். 2000 ஆண்டுகளுக்கு முன்பு கிறிஸ்து தம் படைப்புகள் அனைத்திற்கும் குறிப்பாக, ஏழைகள் எளியமக்கள் மற்றும் தாழ்த்தப்பட்டவர்கள், வரவேற்கப்படாதவர்கள் அனைவருக்கும் தம்மை வெளிப்படுத்த வேண்டும் என்று உறுதிபூண்டார். கீழ்த்திசை அறிஞர்களைப் போல இன்று நாமும் கடவுளை வணங்கி வழிபடுவதற்கு எவ்வளவு பெரிய சலுகையைப் பெற்றுள்ளோம்.



நம் குடும்பம், நம்முடைய இல்லத்தின் பீடம் ஆண்டவரே தம்மை வெளிப்படுத்தி வாழும் தலதிருஅவையாகும். நம் உள்ளங்களிலும், இல்லங்களிலும் இறைவன் தங்கி வாழும் அளவுக்கு நாம் எந்த விதத்தில் நம்மைத் தயார்படுத்திக்கொண்டிருக்கிறோம். நாம் எப்பொழுதும் நம்முடைய ஆராதனையை செலுத்தக்கூடிய தகுதியான இடம் நம்முள் இருக்கிறது.

மிகவும் விலைமதிக்கத் தக்க இக்குழந்தையைத் தேடிய கீழ்த்திசை ஞானிகளைப் போல, நம் வாழ்வில் நம் குடும்பத்தில் இக்குழந்தையைத் தேடுவோம். இறைவனை எதிர்கொண்ட தருணங்களை குடும்பமாக நினைவுகூருவோம். பல சமயங்களில் வரவேற்கப்படாத விருந்தினரைப் போல; அவர் அங்கிருக்கிறார் என்று அறிந்தும், அவரை வரவேற்காமல் வெதுவெதுப்பான மக்களாக இருந்துள்ளோம். ஒருவேளை நம்முடைய அழுக்கான இதயங்களைத் திறந்துகாட்டிவிடுவோமென்ற அச்சமா? கடவுள் அங்கே இல்லையென்றால் வேறு எங்கே இருப்பார்? பாதிப்புக்குள்ளானவர்களின் இடத்தில், கடவுள் தன்னை வெளிப்படுத்திக்கொள்கிறார். மேலும் நாம் எந்தவித எதிர்ப்பார்ப்பும் இல்லாமல் அவரிடம் சரணடைந்தால், அவரின் உதவி நமக்குண்டு என்று உறுதியளிக்கிறார். நாம் வாழ்வுபெறவும், அந்த வாழ்வை உலகிற்குத் தரவும், இயேசுவில் தான் நம்முடைய எதிர்நோக்கை வைக்கவேண்டும்.

சிலநேரங்களில் நமது வேலை, தொழில், அச்சம், சமூக வாழ்க்கை இன்னும் நம்முடைய உறவுகளுக்கும் தருகின்ற மரியாதை கடவுளைவிட அதிக முன்னுரிமைகளாக மாறிவிடுகின்றன. இந்தக் காலத்தில் நம்முடைய குடும்பத்தில் கடவுளுக்கு நேரம் உள்ளதா? குடும்பமாக இறைவேண்டல் செய்வது இப்போது இல்லாதது, மிகவும் சோகமான ஒன்று. கூடி இறைவேண்டல் செய்யும் குடும்பம், இந்த இறைவெளிப்பாட்டை மீண்டும் தட்டியெழுப்புகிறது. நாம் தான் ஆண்டவரை மகிழ்ச்சிப்படுத்தும் சாம்பிராணியும், வெள்ளைப் போளம் மற்றும் பொன் என்னும் காணிக்கைகள். நம் வழியாக இயேசுவைப் பிறருக்கு வெளிப்படுத்த நம்மை அவரிடம் அர்ப்பணிப்போம். ✣

**மனனம் செய்ய இந்த வார வசனம்:**

மக்களினத்தார் அனைவரும் உம்திருமுன் வந்து உம்மைப் பணிவர்.

(திருப்பாடல்: 86:9)

**இன்றைய வாசகங்கள்:**

எசாயா 60: 1-6;

திருப்பாடல்: 72: 1-2, 7-8, 10-13;

எபேசியர் 3: 2-3, 5-6;

மத்தேயு: 2: 1-12.

*Published by:*
Peninsular Malaysia Pastoral Team

*Email:* api@archkl.org

INTERNAL CIRCULATION ONLY

BUL 02/2023